செ. கு. எண்: 152 நாள்: 15.12.2016

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை – 15.12.2016

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், நம்புதாளை கிராமத்தில் இயங்கி வரும் தனியார் ஐஸ் தொழிற்சாலையில் 13.12.2016 அன்று அமோனியம் குளோரைட் உருளையில் கசிவு ஏற்பட்டு வெடித்ததில், அப்போது தொழிற்சாலையில் பணியிலிருந்த மின் பணியாளர் திரு. கண்ணன் மற்றும் அருகிலுள்ள கடைகளில் நின்று கொண்டிருந்த ஆறு நபர்கள் மூச்சு திணறி மயக்கம் அடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் உடனடியாக ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் புதுக்கோட்டை மாவட்டம், ஏம்பல் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு. பச்சைமுத்துவின் உடல்நிலை பாதிக்கப்பட்டதில், மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த திரு. பச்சைமுத்து குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் மயக்கமடைந்து ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆறு நபர்களுக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளித்திட மருத்துவமனை அதிகாரிகளுக்கும், ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. பச்சைமுத்து அவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**